வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

செய்முறைத் தொழினுட்பத்திறன்கள்

தரம் : 06 **நேரம் : 2 மணி**

பகுதி - I

மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. புராதன காலத்தில் செய்திகளைப் பரிமாற கையாண்ட முறை எது?
1) புகையூட்டல் 2) தொலைபேசி மூலம்
3) கடிதம் மூலம் 4) பத்திரிகை மூலம்

02. கணனியில் தெரிவுசெய்த படத்தை திருப்பிக்கொள்ள பயன்படுவது எது?
1) Cut 2) Save 3) Rotate 4) Copy

03. பின்வருவனவற்றுள் முறைசாரா வடிவமாக அமைவது எது?
1)  2) 3)  4) 

04. ஸ்டென்சில் அச்சுப் பதித்தல் முறைக்கு தேவையானது எது?
1) எக்ஸ்ரே கடதாசி 2) பஞ்சு 3) அச்சிடும் மை 4) மேற்கூறிய யாவும்

05. உணவுக் கூம்பகத்தின் அடிப்படையில் நாம் மிகக் குறைவாக உள்ளெடுக்க வேண்டியவை எவை?
1) பாலும் பாலுற்பத்திகளும் 2) மீன், முட்டை
3) கொழுப்பும் சீனியும் 4) காய்கறிகள், பழங்கள்

06. தீட்டப்பட்ட அரிசியை விட தீட்டப்படாத அரிசி போசணைத்தரம் கூடியது. இதற்கு காரணம்
1) விற்றமின் B_1 காணப்படல் 2) விற்றமின் C காணப்படல்
3) கல்சியம் காணப்படல் 4) புரதம் காணப்படல்

07. _____ இக் குறியீட்டின் மூலம் குறித்துக் காட்டப்படுவது சமையலறையின் எப்பகுதி?
1) யன்னல் 2) சுவர் 3) கதவு 4) சமைக்கும் அலகு

08. பின்வருவனவற்றுள் நாற்றின் மூலம் பெறப்படும் பயிர்க்கூட்டம் எது?
1) மிளகாய், தக்காளி, கத்தரி 2) முள்ளங்கி, வெண்டி, பயற்றை
3) கங்குன், வற்றாளை, மிளகு 4) மஞ்சள், வெங்காயம், இஞ்சி

09. வீட்டுத் தோட்டத்தில் படெய்லியா மலர்களை பயிரிடுவதன் நோக்கம் யாது?
1) அழகிற்காக 2) மூலிகைக்காக
3) வண்ணத்துப்பூச்சிகளை வரவழைக்க 4) புறாவை வரவழைக்க

10. பற்றாசுக்கோலின் பயன்பாடு யாது?
1) பலகையில் துளையிடல் 2) ஆணி அறைவதற்கு
3) சிறிய பொருட்களை இறுக்கிப்பிடிக்க 4) மெல்லிய உலோக ஒட்டுவேலைகளுக்கு

பின்வரும் கூற்றுக்களை வாசித்து சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.

11. முறைசார் அல்லது முறைசாரா வடிவங்களை ஒன்றுசேர்த்து இலச்சினையை உருவாக்க முடியும். ( )

12. கம்பளித் தையல் ஓர் அலங்காரத் தையலாகும். ( )

13. களவெத்தா மூலம் நத்தைகளின் பெருக்கம் கட்டுப்படுத்தப்படும். ( )

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "





Contact

76667-4945

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன

14. கணனியில் **font size** மூலம் எழுத்தின் அளவை மாற்றலாம். ( )

15. வரையறுக்கப்பட்ட இடவசதியுள்ள இடத்திற்கு பொருத்தமான சமையலறை I வடிவ சமையலறையாகும். ( )

மிகப் பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

PVC குழாய், புரதம், Paint, விற்றமின்கள், நடுகைப் பொருட்கள்

16. கணனியில் _____ மென்பொருளைப் பாவித்து சுயாதீனமாக கையால் வரையவும் நிறந் தீட்டவும் முடியும்.

17. நாற்றுக்கள், வித்துக்கள், தண்டுத் துண்டங்கள் என்பன _____ ஆகும்.

18. காய்கறி, பழங்களில் _____ அதிகளவில் காணப்படும்.

19. உடல் வளர்ச்சிக்கு _____ அவசியம் தேவைப்படுகிறது.

20. _____ வளையும் தன்மை கொண்டது.

(20 x 1 = 20 புள்ளிகள்)

பகுதி - II

முதலாம் வினா உட்பட எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

01. இரண்டாம் தவணையில் மேற்கொண்ட கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
    1. கணிப்பீட்டுக் கருவியை குறிப்பிடுக.
    2. கணிப்பீட்டின்போது பயன்படுத்திய பொருட்களைக் குறிப்பிடுக.
    3. கணிப்பீட்டின்போது பயன்படுத்திய கருவிகள்/ உபகரணங்களை குறிப்பிடுக.
    4. நீர் செய்த செயற்பாட்டை படிமுறையாக எழுதுக.
    5. இக் கணிப்பீட்டின் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் 2 எழுதுக.

    (5 x 2 = 10 புள்ளிகள்)

02. 1. தள வடிவங்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
    2. இரு பரிமாணத் தோற்றம் என்றால் என்ன?
    3. முப்பரிமாணத் தோற்றம் ஒன்றை வரைந்து காட்டுக.
    4. ஸ்டென்சில் அச்சுப் பதித்தல் முறை பாவிக்கப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டை குறிப்பிடுக.
    5. ஆடைகளை அலங்கரிக்கும் முறைகள் 2 எழுதுக.

    (5 x 2 = 10 புள்ளிகள்)

03. 1. உணவு என்றால் என்ன?
    2. உணவின் மூலம் எமது உடலில் ஆற்றப்படும் தொழிற்பாடுகளை குறிப்பிடுக.
    3. புதிய மீனின் இயல்புகள் 2 எழுதுக.
    4. முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட சமையலறையின் இயல்புகள் இரண்டு தருக.
    5. உணவை பழுதடையச் செய்யும் உயிரியற் காரணிகளுக்கு இரண்டு உதாரணம் எழுதுக.

    (5 x 2 = 10 புள்ளிகள்)

04. 1. சட்டகத்துடன் கூடிய உயர்பாத்தியில் பயிர்செய்வதால் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டு தருக.
    2. பயிர் நண்பர் பூச்சிகளைக் கவரும் தாவரங்கள் 2 குறிப்பிடுக.
    3. உயிருள்ள மூடுபடையாக பயிரிடக்கூடிய தாவரங்கள் 2 குறிப்பிடுக.
    4. நாற்றுச் சாடி ஒன்றை வரைந்து குறித்துக் காட்டுக.

    (2 + 2 + 2 + 4 = 10 புள்ளிகள்)

05. 1. பலகையை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட முடிவுப் பொருட்கள் 2 தருக.
    2. வேலை செய்யும் நபரின் பாதுகாப்புத் தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் 2 குறிப்பிடுக.
    3. பற்றாசுக் கோலின் முனை எதனால் ஆக்கப்பட்டுள்ளது?
    4. பின்வரும் உபகரணங்களின் பயன்பாடுகள் ஒவ்வொன்று எழுதுக.

    a) வரையும் ஊசி *b)* கைவாள் *c)* அரம் *d)* கைமுட்டி

    (2 + 2 + 2 + 4 = 10 புள்ளிகள்)

www.kedu.lk